தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

தை 29, சுபானு-திருவள்ளுவர் ஆண்டு 2035

2004 பிப்ரவரி 12, வியாழக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"ஒல்லும்வா யெல்லாம் வினைநன்றே ஒல்லாக்கால்
செல்லும்வாய் நோக்கிச் செயல்"

இயலும் இடங்களில் எல்லாம் செயல் முடிப்பது நலம் தரும். இயலாத இடமாயின் அதற்கேற்ற வழியை அறிந்து அந்தச் செயலை முடிக்க வேண்டும்.

1. வினாக்கள்-விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள். வினா எண் 41, திரு. டி.பி.எம். மைதீன்கான், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

41—

அவசர ஊர்திகள்

***23263—திரு. டி.பி.எம். மைதீன்கான்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாளையங்கோட்டை ஹைகிரவுண்டு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் இயங்காமல் நிற்கும் அவசர ஊர்திகள் மற்றும் அமரர் ஊர்திகள் இயங்கிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2004 பிப்ரவரி 12

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மருத்துவமனையில் 6 ஆம்புலன்ஸ்களும் நல்ல நிலையில் இயங்கி வருகின்றன. 2 அமரர் ஊர்திகள் மிகவும் பழமையான நிலையில் இருப்பதால் அடிக்கடி பழுது ஏற்பட்டு பணிமனைக்குக்கொண்டு சென்று பழுதுகள் சரிபார்க்கப்பட்டு மீண்டும் இயக்கப்படுகின்றன. இதில் ஓர் ஊர்தி கழிவு செய்யப்படும் கருத்துரு பரிசீலிக்கப்பட்டு அதற்குப் பதிலாக வேறொரு ஆம்புலன்ஸ் வாகனம், அமரர் ஊர்தியாக மாற்றப்பட உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 42, திரு. மீ.அ. வைதியலிங்கம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

42—

அம்மை குத்துதல்

***42394—திரு. மீ.அ. வைதியலிங்கம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குழந்தை பிறந்தவுடன் அம்மை குத்தும் பழக்கம் நிறுத்தப்பட்டு விட்டதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டிலும் மற்றும் இந்தியாவிலும் அம்மை நோய் 1978 ஆம் ஆண்டிலேயே ஒழிக்கப்பட்டுவிட்டது. அம்மை நோயை உண்டாக்கும் கிருமிகள் நாட்டிலிருந்து அடியோடு அகற்றப்பட்டு விட்டதால் யாருக்கும் அம்மை நோயால் பாதிப்பு இல்லை. ஆகவே அம்மை குத்துதல் தேவைப்படாததால் அது நிறுத்தப்பட்டு விட்டது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS